# பொங்குற்ற சிங்கங்கள் எங்குற்றனவோ!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதலில் முழக்கம் இட்ட வீரத் தளம், இந்தத் திருத்தலம். மண்மேடு இடுகிற அளவு வெள்ளையர்கள் செய்த நிலை மாறி அது களையப்படும் நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. பாஞ்சாலங்குறிச்சி, எப்படி இருக்கும், அப்படி ஒரு இடம் இருக்கிறதா? அதனுடைய சிறப்பு எத்தகையது என்று ஏங்கிக் கிடந்த தமிழ் மக்களுக்கு விடை கிடைத்து விட்டது. பாஞ்சாலங்குறிச்சியின் பெயர் மறைக்கப்பட்டு விட்டது. அதன் புகழ் மங்கி விட்டது. மங்கி விட்ட புகழை மறைக்கப்பட்டுவிட்ட புகழை, அந்தப் பெருமையை மீண்டும் தமிழகத்தில் இந்தியத் திருநாட்டில் அகில உலகத்துக்கும் கொண்டு வர வேண்டிய நாளாக இந்த நாளைக் கருதுவோம். அதற்காக உறுதியை எடுத்துக் கொள்வோம். இந்த மேடையில் சிறிய அளவில் கட்டபொம்மன் சிலை இருக்கிறது. அவருடைய பரம்பரையைச் சேர்ந்த மக்கள் எதிரே உட்கார்ந்திருக்கிறார்கள். சிலையிலே உள்ள மீசையையும், அவர்கள் வைத்துள்ள மீசையையும் ஒப்பிட்டுப் பார்த்து இந்தப் பரம்பரை வீரத்தை உணருகிறோம்.

“வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்கள் வெற்றித் தோள்கள்” என்று தூக்குக் கயிற்றை முத்தமிட்ட கட்டபொம்மனையும், அவனுக்குப் பிறகும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட அவன் தம்பி ஊமைத்துரையையும், தளபதி சுந்தரலிங்கத்தைப் போன்ற வீரத்தளபதிகளையும் எண்ணிப் பார்க்கிறோம். வெள்ளையர்கள் கட்டபொம்மன் கோட்டையைத் தகர்த்து இந்த இடத்தை உழுது ஆமணக்கு விதைத்ததாக வரலாறு கூறுகிறது.

அகழ்வாராய்ச்சி துறையினர் 67ஆம் ஆண்டு அந்த இடத்தை ஆராய்ந்து கோட்டையின் அடித்தளத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை நாங்கள் இங்கே வந்து பார்த்தபோது மெய் சிலிர்த்தது. உள்ளத்திலே ஏதோ ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. கட்டபொம்மன் காலத்து வீர நினைவுகள் தோன்றின.

வீரபாண்டிய கட்டபொம்மன் தீரத்தோடும் அஞ்சா நெஞ்சத்தோடும் புறமுதுகு காட்டாமல் கடைசி வரை போராடி இன்னுயிரைத் தந்தான். வெள்ளையருக்கு எதிராக முழக்கமிட்ட பெருமை தமிழ்நாட்டுக்கு இருந்திட வேண்டும் என்று கூறிய கட்டபொம்மனையும் அவருடைய வாரிசுகளையும் தமிழ்நாடும், தமிழ்ச் சமுதாயமும் என்றும் மறவாமல் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. கட்டபொம்மன் காலத்தில் பெற்றிருந்த வீரத்தை மீண்டும் பெற வேண்டிய காலம் வந்து விட்டது.

புதுப்பிக்கப்பட்ட பூம்புகார் விழா எடுத்த போது அந்தப் பகுதியிலே வாழும் மீனவர்களுக்காக குடியிருப்பு, படகு, வலை இவைகளை வழங்க 40 லட்ச ரூபாயில் திட்டத்தை அறிவித்தோம். அதைப் போல இங்குள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக கட்டபொம்மனின் வாரிசுகளுக்காக மறு வாழ்வளிக்கும் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் திட்டங்களை அதிகாரிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவரையும் கலந்து கொண்டு அறிவிக்கிறேன். புதிய கட்டபொம்மன் கோட்டைக்கான அடிக்கல் நாட்டு விழா விரைவில் நடைபெறும். இப்போதுள்ள அடித்தளம் அப்படியே பழைமை கெடாமல் இருக்கும். புதிதாக கட்டப்படும் கட்டபொம்மன் கோட்டை எப்படி இருந்திருக்குமென்று கற்பனை செய்து, அதற்கேற்ப கட்டப்படும்.”

உடன்பிறப்பே, 1973ஆம் ஆண்டு நான் அந்த விழாவில் அளித்த வாக்குறுதியை நிறை வேற்றிடும் வகையில் - 1974ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டையை எழுப்புவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தப் பெற்று - அங்கே எழுச்சிமிக்க கோட்டையும் எழுப்பப்பட்டு, அதே 1974ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18ஆம் நாளன்று திறப்பு விழாவும் நடைபெற்று அதிலும் நான் கலந்து கொண்டேன்.

பூலித்தேவனுக்குப் பின், அவரையடுத்து தமிழ் மண்ணிலிருந்து - குறிப்பாக நெல்லைச் சீமையிலிருந்து - விடுதலைக் குரல் எழுப்பிய மாவீரன் - “வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் காணிக்கு ஏது வரி?” என்று முழக்கமிட்ட கட்டபொம்மன் நினைவாக தி.மு.கழக அரசு 74ஆம் ஆண்டிலேயே கோட்டை எழுப்பியது. அந்தக் கோட்டையில் தர்பார் மண்டபத்தில் கட்டபொம்மனின் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதற்கு இருபுறத்திலும் ஊமைத்துரை, வெள்ளையத் தேவன், தானாபதிப் பிள்ளை, சுந்தரலிங்கம் ஆகியோர் உருவங்கள் சிற்ப வடிவங்களாக வடித்தெடுக்கப்பட்டு பதிக்கப்பட்டுள்ளன.

18-8-1974 அன்று நடைபெற்ற கட்டபொம்மன் கோட்டை திறப்பு விழா நிகழ்ச்சிக்கு அன்றைய கல்வி அமைச்சர் நாவலர் தலைமை தாங்கினார். மேலும் அந்த விழாவில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி., அமைச்சர்கள் ஆதித்தனார், ப.உ.சண்முகம் மற்றும் மணலி கந்தசாமி, எஸ்.எஸ். தென்னரசு, தூத்துக்குடி எம்.எஸ். சிவசாமி, ஆர்க்காடு வீராசாமி, கா.மு. கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். விழா மேடையிலேயே கட்டபொம்மனின் வழித் தோன்றல்களான 200 பேர்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்கப் பட்டது.

அந்த விழாவில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் பேசும்போது, “இதுவரை நான் அனுபவித்திராத மகிழ்ச்சியை - என்றும் அனுபவிக்க முடியாத மகிழ்ச்சியை இந்தச் சிறப்பான விழாவின் மூலம் நான் அடைகிறேன். கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் கலைஞர் நிறைவேற்றுகிறார் என்பதற்கு இது அடையாளம். சரித்திரம் காணாத அற்புதத்தை கலைஞர் இங்கே நிறைவேற்றியிருக்கிறார். இந்தச் சாதனை, தமிழன் என்ற உணர்வு படைத்த ஒவ்வொருவரும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நன்றி உணர்ச்சியோடு போற்றத்தக்கதாகும். தமிழ்நாட்டில் இப்போது இரண்டு கோட்டைகள் இருக்கின்றன, ஒன்று கலைஞர் ஆளும் கோட்டை, இன்னொன்று கலைஞர் அமைத்த கோட்டை. இவ்வளவு சிறப்பான காரியங்களை செய்து வரும் தம்பிகளுக்கு ஆசி கூற அண்ணன் இல்லையே என்ற குறை இருக்கிறது. என்னை அண்ணனாக நம்புங்கள், நான் வாழ்த்துக் கூறுகிறேன்” என்றார்.

சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு நெல்லைச் சீமையிலே கழக அரசினால் எப்படிப்பட்ட செயல்கள் செய்யப்பட்டன என்பதை தற்போது இங்கே மாநாடு நடைபெறுகின்ற நேரத்தில் இளைஞர்கள் எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அப்போது நடைபெற்ற இந்த விவரங்களையெல்லாம் விடியற்காலை 3 மணி என்றும் 4 மணி என்றும் எழுந்தமர்ந்து, உலகமே உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் எழுதிக் கொண்டிருக்கிறேன். அந்தக் கட்டபொம்மன் விழாவிலே நான் ஆற்றிய உரையை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? நீண்ட உரை என்ற போதிலும் முக்கிய பகுதிகளை மட்டும் குறிப்பிடுகிறேன்.

“எனக்கு முன்னால் பேசிய கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், நண்பர்களும் தி.மு. கழக அரசு வரலாற்றுக் கருவூலங்களை எந்த வகையிலே போற்றிப் பாதுகாக்கிறது என்பது பற்றிய விளக்கங்களையெல்லாம் வழங்கினார்கள். சிலம்புச் செல்வர் அவர்கள் 175 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கட்டபொம்மனுடைய வரலாற்றை நம்முடைய கண்ணெதிரே இன்றைக்கு நடைபெறுவது போன்று அப்படியே படம் பிடித்து இங்கே நடமாட விட்டார்கள்.

சிலம்புச் செல்வர் அவர்கள் தமது வரலாற்றுப் பேச்சில், இதையெல்லாம் பார்க்க இந்தத் தம்பிகளின் அண்ணன் இல்லையே என்று கூறி, எங்கள் கண்களை குளமாக்கி, எங்கள் இதயத்தை ஒரு கணம் துடிக்கவிடாமல் செய்து, நா தழுதழுக்க இந்த மேடையிலே என்னை நிறுத்தி விட்டு அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொன்னதைப் போல் எங்களுடைய செயல்களைக் கண்டு மகிழ அண்ணன் இல்லை என்றாலும், எங்களைப் பாராட்டுவதற்கிருந்த எங்களை வளர்த்த தந்தை பெரியார் இல்லை என்றாலும், சிலம்புச் செல்வரைப் போல, பெரியவர் மணலியைப் போல நல்ல மனம் படைத்த மூத்தவர்கள் சிலர், அண்ணன் வழியில், தந்தை பெரியார் வழியில் இருக்கின்றார்கள் என்ற ஒரே நம்பிக்கையோடுதான் இன்றைக்கு அலையெனத் திரண்டு வரும் எதிர்ப்புக்களாயினும் சிரித்த முகத்தோடு அவைகளை சமாளித்து சந்தித்துக் கொண்டு வருகின்றோம்.

நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. சிலம்புச் செல்வர் அவர்களும் மணலி அவர்களும் நாம் சமைத்த விருந்தை உண்டு, அதனுடைய சுவையைப் பாராட்ட வந்தவர்கள். எந்த இடத்திலும் சமைத்தவனே தன்னுடைய சமையலைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டான். சமையற்காரன் அதிகம் பேச மாட்டான். சாப்பிட்டவர்கள்தான் அதிகம் பேச வேண்டும், அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

தமிழக அரசை ஆள்கின்ற பொறுப்பை இன்றைக்கு நாங்கள் ஏற்றிருக்கிறோம் என்றால் இந்தப் பொறுப்பை பெரிய அந்தஸ்தாக கருதி எங்களுக்கு கிடைத்த உயர்வாக உச்சகட்டப் பதவியாக கருதி இந்தப் பொறுப்பில் நாங்கள் இல்லை, மக்களுக்குப் பணியாற்ற கிடைத்த வாய்ப்பாகத்தான் கருதியிருக்கின்றோம்.

இந்த ஆட்சியின் நல்ல காரியங்கள் அனைத்தையும் மறைத்து விட்டு - வரலாற்றுப் புகழ் மிக்க சாதனைகளையெல்லாம் மறைத்து விட்டு - ஏழையெளிய நடுத்தர, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்யப்படுகின்ற காரியங்களையெல்லாம் மறந்து விட்டு - அல்லது மறைத்து விட்டு இந்த ஆட்சி விலக வேண்டுமென்று கூறுவார்களானால் - செயின்ட் ஜார்ஜ் கோட்டை நாங்கள் புகுந்த கோட்டை, என்றைக்கு வேண்டுமானாலும் வெளியே வரலாம். நாங்களாக பார்த்து வெளியே வந்தாலும் போயிற்று - மக்களாகப் பார்த்து ஜனநாயகத் தீர்ப்பின்படி வெளியே போ என்று சொன்னாலும் போயிற்று, அந்தக் கோட்டையை விட்டு வெளியேறலாம். ஆனால் இது போன்று நாங்கள் கட்டிய கோட்டையிலிருந்து என்றைக்கும் எங்கள் பெயர் அழியாது.

எங்களை ஆட்சிப் பீடத்திலிருந்து அகற்றி விட்டு பிறகு வருகின்ற எந்த நபர் நாங்கள் செய்திருக்கிற இந்தக் காரியங்கள் எல்லாம் தவறு என்று பொது மக்களிடம் எடுத்துச் சொல்லி கட்டபொம்மன் கோட்டை கட்டியது தவறு; கட்ட லாமா? இடித்து எறி என்று சொல்ல எந்த வீராதி வீரருக்காவது துணிவுண்டா? சரித்திர ஏட்டில் நாங்கள் எழுதியிருக்கின்ற எந்தச் சாதனையை தி.மு.க. அரசுக்குப் பிறகு எந்த அரசு இவையெல்லாம் தவறு என்று கூறப் போகிறது?

ஆகவேதான் தமிழகத்தில் அரசோச்சி இருக்கிறோம் என்றால் எங்களுக்குத் திருப்தியான காரியங்களைச் செய்திருக்கிறோம். எங்களுக்குத் திருப்தி எதுவென்றால் மக்களுக்குத் தேவையானவைகளை செய்திருக்கிறோம். செய்ய வேண்டியவைகளை செய்தோம் - வாக்களித்தவைகளைச் செய்தோம். கழக அரசு வீழ்த்தப்பட்டாலும், கழக அரசின் சாதனைகளும், புகழும் ஆண்டாண்டுக் காலம் தமிழகத்திலே நிலைத்திருக்கும். ஆனால் அதை எவராவது வீழ்த்தினால் அவர் பெயர் நீர் மேல் குமிழாக அழிந்து விடும்.

கட்டபொம்மன் தானே கயிற்றை எடுத்து கழுத்திலே மாட்டிக் கொண்டு - ஐயோ கோட்டையின் மீதிருந்து போரிட்டுச் சாகவில்லையே - புளிய மரத்துக்குக் கீழே என்னைத் தூக்கிலிடுகிறீர்களே என்று வாய் விட்டுக் கதறி - ஆனால் மரணத்திற்கு அஞ்சாமல் எதிரிகளுக்குத் தலை வணங்காமல் புன்முறுவலோடு நான் வீழ்ந்து படுவேன், ஆனால் தலை தாழ்த்த மாட்டேன் என அஞ்சாத நெஞ்சத்தோடு அரிமாவென வீழ்ந்தானே, அப்படி வீழ்ந்தவனுக்கல்லவா விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே வீழ்ந்தவன் வீரனானால் அவனுக்கு விழா உண்டு. வாழ்பவன் கோழையானால் அவனுக்கு விழா கிடையாது.

வீழ்ந்தவன் வீரன், ஆகவே அவருக்கு விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் பாஞ்சைப் பகுதியில் பல நினைவுச் சின்னங்களை எழுப்பத் துடித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே வீழ்வதைப் பற்றிக் கவலையில்லை. வீழ்கிறவரை மக்களுக்கு என்ன செய்கிறோம் என்பது இருக்கிறதே, அந்தச் சரித்திர அத்தியாயத்தை யாரோ குரங்கு மனம் படைத்தவர் கிழித்தெறிந்து விடலாம். 175 ஆண்டுக்கு முன்பு வீழ்ந்து பட்ட வீரரின் சரித்திரம் புதிய கீதத்தோடு பரப்பப்பட்டிருக்கிறது.

அதைப் போல் தி.மு. கழகம் என்கிற வீரனுடைய வரலாறு இடையிலே துவளலாம். ஆனால் என்றைக்கோ ஒரு நாள் பூம்புகார் பட்டினம் புதிய பொலிவோடு எழுந்ததைப் போல், பாழடைந்த பாஞ்சாலங்குறிச்சி பாங்குடன் விளங்குவது போல் வீழ்ந்து விட்டவர்களுக்கு எதிர் காலம் உண்டு என்ற நம்பிக்கை நட்சத்திரமாக தி.மு. கழகம் இருக்கும்.

இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த இனிய நண்பர் கவிக்கோ அப்துல் ரகுமான் அண்ணாவைப் பற்றிப் பாடும்போது, “வீழ்ந்தாலும் விதையைப் போல் வீழ்பவன் நீ” என்று பாடினாரே, அதைப் போல தி.மு. கழகம் வீழ நேரிட்டாலும் விதை போலத்தான் விழும். வீழ்ச்சியைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறானே என்ற பலகீன உணர்ச்சி யாருக்காவது ஏற்பட்டால் அவர்களுக்குச் சொல்கிறேன். அமைச்சர்களாக இருந்தால்தான் எங்களால் புகழ் பெற முடியும் என்று எண்ணுகிறீர்களா? சிலம்புச் செல்வரும், மணலி கந்தசாமியும் அன்று சொன்னதெல்லாம் இன்று நிறைவேறுகிறது என்றால் அவர்கள் எல்லாம் அமைச்சர்களாக இருந்து சொல்வதாலா நிறைவேறுகிறது?

நான் வரி கொடுக்கிறேன், என்னை விட்டு விடுங்கள் என்று சொல்லியிருந்தால் கட்டபொம்மனைக் கூட வெள்ளைக்காரர்கள் விட்டிருப்பார்கள். ஆனால் அவன் துரோகிகளுடன் சேர்த்து எழுதப்படும் பட்டியலில் இடம் பெறுவானே தவிர விழாக் கொண்டாடப் படுமளவுக்கு 175 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக மக்கள் தயாராக இருக்க மாட்டார்கள்.

பதவிகள் பெரிதல்ல; ஆற்றுகின்ற பணி; மான உணர்ச்சியோடு போராடுகின்ற வீரம் - அவை தான் என்றைக்கும் போற்றப்படக் கூடியவைகளாகும். அந்த வீரத்தை நெஞ்சில் ஏற்றிய தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாடுபடும் ஒரு இயக்கமாக தி.மு. கழகம் இப்படிப்பட்ட பெரியவர்களின் துணை யோடு அரசுக் கட்டிலில் இருக்கிறது. அண்ணன் இல்லை என்றாலும் - ரத்தத்தோடு ரத்தமாக - தசையோடு தசையாக - எங்கள் கண்ணின் கருமணியாக - இதயத்தின் துடிப்பாக இருக்கிறார். எங்கள் மூச்சோடு மூச்சாக இருக்கிறார். அந்த அண்ணனை இதயத்தில் நினைத்து, அவரே இருந்து செய்ய முடியாத காரியங்களை அவருக்காகச் செய்கிறோம். அண்ணனே! இதோ இந்தக் கட்டபொம்மன் கோட்டை உனக்குக் காணிக்கை! காவிரிப் பூம்புகார் கலைக் கூடம் உனக்குக் காணிக்கை! நாளை உருவாக இருக்கும் வள்ளுவர் கோட்டம் உனக்குக் காணிக்கை! இப்படிப்பட்ட காணிக்கைகளை தொடர்ந்து தந்து கொண்டே இருப்போம்!”

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் எழுதுவதற்காக நான் ஊன்றிப் படித்த கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் எழுதிய “பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம்” என்ற நூலில் இடம் பெற்றுள்ள ஒரு பாடலுடன் இந்தக் கடிதத்தை இன்று நிறைவு செய்கிறேன்.

“செந்தமிழ் நாட்டில் பிறந்தாலும் இவன்
சீர்த்தி உலகம் எல்லாம் பரந்து
அந்தரம் எங்கும் முழங்கி வருவதால்
யாரிவன் ஆண்மை அளவிடுவார்?
மோழை எருதுகள் போல இந்நாட்டுள்ள
பாளைய காரர் எல்லாம் பணிந்தே
ஏழைகள் ஆக இழிந்து நின்றார் இவன்
ஏறு போல் சீறி எதிர் எழுந்தான்.
நூறுக்கிருந்தாலும் ஆறுக்குள் மாய்ந்தாலும்
போருக்குள் மாய்வதையே விழைந்து
பாருக்குள் பாஞ்சையில் வாஞ்சையாய் வந்தவன்
பேருக்கொருவனாய்ப் பேச நின்றான்.”

உடன்பிறப்பே,

இது தமிழ் வீரத்தின்
பெருமை கூறும் பாடல் -
தன்மானமற்று தலை வணங்கியோர்
தலையில் குட்டும் பாடல்
இளைஞர்கள் இதயத்தில்
பதிந்திட வேண்டிய பாடல்
இதனால் இந்தப் பாடலை
இளைஞர் அணி மாநாட்டுப்
பரிசாக வழங்குகிறேன்.

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 27.11.2007)

# நாடாளுமன்றத்தில் கண்ணீர் புகை குண்டு வீச்சு!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

உள்ளே குதித்த நபர்கள் கோஷம் எழுப்பினர் என்றும் உள்ளே நடந்த களேபரத்தில் அவை தமக்கு சரியாக கேட்கவில்லை என்றும் சு. வெங்கடேசன் எம்.பி. தெரிவித்தார்.

### சர்வாதிகாரம் கூடாது என முழக்கமிட்டனர்!

மக்களவைக்குள் அத்துமீறி நுழைந்த இருவரும் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக தகவல். அத்துமீறி நுழைந்த இருவர் கைது செய்யப்பட்ட நிலையில் நாடாளுமன்ற வளாகத்திற்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்ட இரண்டு பெண்களை போலீசார் கைது செய்துள்ளனர். கைதான பெண்களில் ஒருவர் பெயர் நீலம் (42 வயது) மற்றும் இன்னொருவர் பெயர் அமோல் ஷிண்டே (25 வயது) என தெரியவந்துள்ளது. ‘சர்வாதிகாரம் கூடாது’ என மக்களவைக்குள் நுழைந்த இருவரும் கோஷமிட்டதாகக் கூறப்படுகிறது.

### இந்திய நாடாளுமன்ற தாக்குதலின் 22வது நினைவு தினம்!

2001ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்ற தாக்குதல் நடந்து 22வது நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப் பட்டது. நாடாளுமன்ற வளாகத்தில் இந்த தாக்குதலில் உயிரிழந்த 9 பேருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் நரேந்திர மோடியும் துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கரும் இந்த தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர். இந்த தாக்குதலில் நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த 8 வீரர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று நாடாளுமன்றத்தில் அத்துமீறி நுழைந்து கண்ணீர் புகைக் குண்டு வீசி தாக்குதல் நடத்தியவர்கள் பா.ஜ.க. எம்.பி.யிடம் நாடாளுமன்றத்திற்குள் செல்ல பரிந்துரைக் கடிதம் பெற்று வந்ததும் தெரிய வந்துள்ளது. மேலும் தொடர் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்தச் சம்பவத்தால் நாடாளுமன்றத்தில் பெரும் பரபரப்பு நிலவியது.



மிக்ஜாம் புயல் காரணமாக செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் பெய்த கனமழையால் தாம்பரம் மாநகரமே வெள்ளக் காடானது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆராய நேற்று மத்திய குழு புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர் ராகுல்நாத், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் அழகுமீனா ஐ.ஏ.எஸ்., 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.